# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
ஐப்பசி 12
துல் ஹஃதா பிறை 26
ஞாயிறு (29 10-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 43

விலை சதம் 60


# இதுவா கட்டுப்பாடு?

இந்த நாட்டுத் தமிழ்த்தேசிய இனத்தின் தன்மானத்தையும் ஒற்றுமையையும், விடுதலையையும் தனது இலட்சியமாக— குறிக்கோளாகக் கொண்டுள்ள ஒரேயொரு விடுதலைப் பேரியக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியாகும்.

தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் ஈழத்தின் அரசுரிமையை மீட்டு— சுதந்திர சோசலிச மத சார்பற்ற தமிழீழ அரசொன்றை நிறுவுதலே கூட்டணியின் தெளிவான, திர்க்கமான, திட்டவட்டமான ஒரேயொரு அரசியல் இலட்சியமாகும்.

இந்தப் புனிதமான— தெய்வீகமான தேசவிடுதலையென்ற ஒரேயொரு குறிக்கோளை முன்வைத்தே கூட்டணி 1977 ஆடிப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. தமிழீழ அரசை நிறுவுவதற்கு தமிழீழ மக்களின் கட்டளையை கூட்டணி தேர்தலின்போது நாடி நின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழ் மக்கள் கிஞ்சிற்றும் ஐயத்துக்கிடமற்ற முறையில் அந்தக்கட்டளையை— (MAN DATE) வழங்கினர். சில தொகுதிகளில் கூட்டணி நிறுத்திய வேட்பாளர்களையிட்டு மக்கள் அதிருப்தி தெரிவித்தாலும் கூட— அதையெல்லாம் மறந்து கொள்கைக்காக— விடுதலையொன்றுக்காகவே —கூட்டணிக்கு தமிழ் மக்கள் பெருவாரியாக வாக்களித்து வெற்றி சேர்த்தனர்.

தேர்தலில் வாக்களிப்பதன் மூலமோ— வெற்றியீட்டுவதன் மூலமோ ஈட்டக்கூடியதல்ல தேச விடுதலையென்றாலும்— இந்தத் தேர்தல் முடிவு தமிழ் ஈழ அரசை அமைப்பதில் தமிழ் மக்களுக்கிருக்கும் திடமாத்திரமான உறுதியை உலகுக்குத் துலாம்பரமாக்கியது.

கூட்டணியின் கரங்களில் சுதந்திரத் தமிழ் ஈழம் எனும் துறையைநோக்கி விடுதலை இயக்கமெனும் கப்பலை செலுத்தும் பாரிய பொறுப்பை மிகுந்த நம்பிக்கையோடும், பவித்திரமான விசுவாசத்தோடும் தமிழ் மக்கள் ஒப்படைத்தார்கள்!

ஆனால் இன்றைக்கு கூட்டணி பா. உக்கள் ஒரு சிலர் நடந்துகொள்ளுகிற முறையைக் கண்டு தமிழ் மக்கள் வேதனையும், வெய்துயிர்ப்பும் அடைந்துள்ளனர் என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்டுவது எமது கடமையாகும்.

மாவட்டமந்திரியென்ற 'தங்குமடம்' கூட்டணியின் கொள்கைத் திட்டத்திலே உரிய தொன்று அல்ல; அது இடையிலே நமது விடுதலைப் பயணத்தைத் தாமதப்படுத்துவதற்காக சிங்கள ஏகாதிபத்தியத்தினுல் தற்காலிகமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அதிலே உட்கார்ந்து சற்று ஓய்வெடுத்துக்கொண்டு பின்னர் பயணத்தைத் தொடரலாம் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்; வேறுபலரோ இதிலே உட்கார்ந்தால், பயணம் மேலும் தாமதமாகும், தடைப்படும்; தங்குமடத்திலே நம்மை உட்கார வைத்து விட்டு, நமது எதிரி நமது பயணத்தை மேற்கொண்டு தொடரவே முடியாதவாறு நெருக்கடிகளையும் தடைகளையும் அதிகரிக்கலாம்; எனவே தடை பல உண்டெனினும் தடந்தோளுண்டு என்ற பாரதிதாசனின் கூற்றின்படி— தங்குமடங்களை நாடாது பயணத்தை தொடருவோம் என்கின்றனர்!

இது இயக்க அளவிலே மனம் விட்டுக்கூடிக் கலந்து பேசித் தீர்வு கண்டு கொள்ள வேண்டிய ஒரு அற்பமான பிரச்சினை; ஆம், நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் புனிதமான, மகோன்னதமான தேசவிடுதலையென்ற இலட்சியத்தின் முன்னே மாவட்ட மந்திரிப் பிரச்சினை வெறும் மின் மினிதான்!

கூட்டணியின் பொதுச்சபை அளவிலோ— செயற்குழு அளவிலோ — இதைப்பற்றி ஆராய்ந்து திர்க்கமான, தெளிவான ஒரு முடிவை எடுத்து அதன்படி செயற்படுவதை விடுத்து—இந்தப் பிரச்சினைகள் குறித்துக்கூட்டணி பா.உ.க்கள் ஆளுக்காள் மாறுபட்ட வெவ்வேறு விதமான அறிக்கைகள் நாள்தோறும்நாளேடுகளில் விடுத்துக்கொண்டிருப்பதைப் படித்துப் படித்துக்கூட்டணிக்கு வாக்களித்த தமிழன் ஒவ்வொருவனும் மனங் குழம்பிப் போயிருக்கிறுன்!

கூட்டணியிலுள்ள ஒவ்வொருவரும் தத்தம் மனப்போக்கின்படி பத்திரிகை அறிக்கைகளின் மூலமே ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்துக்களைப் பகிரங்கமாக பரிமாறிக் கொள்ளுவது என்றுல், அப்புறம் கூட்டணி என்ற ஒரு இயக்கம் ஏன்? அதற்கெனச் சட்ட திட்டங்கள் ஏன்? கட்டுப்பாடு ஏன்? அமைப்பு ஏன்? பொதுக்குழுவும் செயற்குழுவும் ஏன்? மாற்றுனின் செய்தி ஏடுகள் மூலம் ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாமே?

நிச்சயம் இந்தப் பிரச்சினைகளை அலசத்தான் வேண்டும்—ஆராயத்தான் வேண்டும்—திர்க்கமான முடிவு எடுக்கத்தான் வேண்டும்- அவற்றை செயற்படுத்தத்தான் வேண்டும். ஆனுல் இதை இயக்க மட்டத்தில்—செயற்குழு பொதுக்குழு அளவில் செய்ய வேண்டுமே தவிர—பத்திரிகை அறிக்கைகள் மூலமாக வல்ல!

அதுவும் விடுதலை இயக்கத்தின் தலைவர்—இனத்தின் தலைவர் வெளிநாட்டிலே இருக்கும்போது—வெளிநாடுகளிலே நமது விடுதலைக்கு ஆதரவுதிரட்டிவரும் போது- இங்கே இப்படி நமது பா-உக்கள் கூட்டணியையே காட்டிக்கொடுக்கும் விதத்தில்—கூட்டணியின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையே சிதறடிக்கும்

## எண்ணம்

விதத்தில்—அறிக்கைகள் விட்டுக்கொண்டிருக்கலாமா? எதிரிகளும் இனத்துரோகிகளும் நம்மைப்பார்த்து சிரிப்பதற்கு இடந்தரலாமா?

**ஒரு விடுதலை இயக்கத்துக்கு முதல் தேவை கடடுப்பாடு. அந்தக கடடுப்பாட்டுணர்வை இயக்கத்துக்குள் வளர்க்க வேண்டிய பொறுப்புவாய்ந்த பா. உக்களே கட்டுப்பாட்டை மீறி வருவது கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.**

எதிர்காலத்திலாவது பத்திரிகை அறிக்கைகளைத் தவிர்த்து—எந்தப் பிரச்சினையென்றாலும், அதைக் கூட்டணியின் செயற்குழு— பொதுக்குழு அளவிலே—இயக்க மட்டத்துக்குள்—பேசித்தீர்த்துக்கொள்வதற்கு கூட்டணி பா.உக்களும், ஏனைய உறுப்பினர்களும் முயற்சிக்க வேண்டுமென்று வினயமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

# தமிழ் இளைஞர், மகளிர் மந்திராலோசனை!

## இன்று யாழ்நகரில் நடைபெறும் அதிமுக்கிய கூட்டங்கள்!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் இளைஞர் அமைப்பான தமிழ் இளைஞர் பேரவையும், மகளிர் அமைப்பான தமிழ் மகளிர் பேரவையும், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் (28, 29) யாழ்ப்பாணத்தில் தனித் தனியே கூடி, இன்றைய அரசியல் நிலைபற்றியும் தமிழீழவிடுதலைப் போராட்டத்தைத் துரிதப் படுத்துவது பற்றியும் மந்திராலோசனை நடத்துகின்றன.

இக்கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகள் ஞாயிறு மாலை யாழ் நகரில் நடைபெறும் தமிழ் இளைஞர் பேரவையின் பகிரங்கப் பொதுக்கூட்டத்தில் பிரகடனப் படுத்தப்படவுள்ளன.

இன்றைய அரசியல்தேக்க நிலை குறித்தும், இதிலிருந்து விடுபட்டு, தமிழீழ விடுதலை இயக்கத்தை விரைவு படுத்துவதற்குமான திட்டங்கள் குறித்தும் தமிழ் இளைஞர் பேரவையின் பொதுக் குழுக்கூட்டத்தில் ஆராயப் படுமென்று தெரியவருகிறது. ஞாயிறு காலை நடைபெறும் இப்பொதுக்குழுக் கூட்டத்தில் தமிழ் ஈழம் முழுவதிலுமிருந்தும் கொழும்பிலிருந்தும் பேராளர்கள் கலந்துகொள்வார்கள் என்று அறியப்படுகிறது.

இப்பொதுக்குழுக் கூட்டத்தில் தமிழ்இளைஞர்பேரவையின் தலைமைச் செயற்குழுவினுல் 19-10-78ல் எடுக்கப்பட்ட முடிவுகள் அனைத்தும் அங்கீகாரத்துக்கு விடப்படுவதுடன் இன்றைய அரசியல் நிலையைத் தெளிவுபடுத்தி இலட்சியப்பாதையில் தொடர்ந்து செல்வதற்காக சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

மாலை 5 மணிக்கு யாழ் கோட்டை மைதானத்தில் தமிழ் இளைஞர் பேரவை பகிரங்கப் பொதுக்கூட்டமொன்றை நடத்தி தனது தீர்மானங்களை விளக்கவிருக்கிறது. இக்கூட்டத்துக்கு பொலிசாரிடம் அனுமதிகோரப் பட்டுள்ளது. பொலிசார் அனுமதி மறுக்கப்பட்டால், இக்கூட்டம் யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெறலாமென்று தெரிகிறது.

### தமிழ் மகளிர் பேரவை

தமிழ் மகளிர் பேரவையின் பொதுக் குழுக் கூட்டமும் 28-10 78 சனி மாலை 2மணிக்கு கூட்டணித்தலைமைச்செயலகத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திலும் இன்றைய அரசியல் நிலையில் தமிழ் மகளிர்பேரவையின் கருத்துக்கள் பற்றி முடிவுசெய்யப்படும்.


அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த தீபாவளி வாழ்த்துக்கள்.
உங்கள் அபிமானப் பாடல்கள் எதுவானாலும் பதிவு செய்ய நாட வேண்டிய இடம்
**அக்காய் றெக்கோடிங் (B)பார்**
**AKAI RECORDING BAR**
**காங்கேசன்துறை வீதி,**
**தெல்லிப்பழை.**


**தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலியாக மாறினன் அற்றைத் தமிழன்! துன்பத்திலும் தூங்குகிறான் இற்றைத்தமிழன்!!

**தென்மொழி பெருஞ்சித்திரனார்**

ஒரு வீட்டினுடைய தூணிலே ஓர் இளம்பெண் சாய்ந்துகொண்டு நிற்கிறாள். அந்தப் பெண்ணுக்கும், அந்தத் தெருவிலேயிருக்கும் ஓர் இளைஞனுக்கும் அன்பு. அந்த இளைஞன் அந்தப்பக்கமாக அடிக்கடி வருவான். அவனை எதிர்பார்த்து அந்தத் தூணிலே அவள் சாய்ந்து கொண்டிருக்கிறாள். அப்படிச் சாய்ந்துகொண்டிருக்கிறவள் இன்றைக்கு அந்த இளைஞன் வராமையினால் மிக வருத்தத்தோடு இருக்கிறாள். அந்த இளைஞன், காலையிலிருந்து மாலை வரை வருவான் என்று எதிர் பார்த்து ஏமாறிப்போய் மிகவும் துயரந் தோய்ந்த முகத்தோடு அந்த வீட்டிலே சாய்ந்துகொண்டு இருக்கிறாள்.

அந்த வழியாக அந்த இளைஞனுடைய தாய் வருகிறாள். அந்தத் தாயைப் பார்த்து அவள் கேட்கிறாள். ''அம்மா உங்களுடைய பிள்ளை எங்கே'' என்றுகேட்கிறாள். இந்தக் காட்சியை அந்தப் புலவர் எழுதுகிறார். ''சிற்றில் நற்றூண் பற்றி நின் மகன் யாண்டு உளனோ என வினவுதி'' இதிலே இருக்கிற சொற்கள் இலக்கிய வடிவாக ஒரு சில சொற்கள் மட்டுந்தான் இருக்கின்றன.

சிற்றில்—சிறியவீடு; நற்றூண்—நல்லதூண்; பற்றிக்கொண்டு நின் மகன்யாண்டு உளனோ என வினவுதி; ''என் மகன் யாண்டுஉளனோ என் அறியேன்'' அவள் விடை சொல்கிறாள். என் மகன் எங்கே என்று எனக்குத்தெரியவில்லை. ஊரும் புலி சேர்ந்து போகிய கடலலை போல் ஈன்ற வயிறும் இதுவே; தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே'' என்று ஒரு அழுங்கலான ஒரு உணர்வோடு, இரக்கமான ஒரு உணர்வோடுசொல்கிறாள்.

''என் மகன் எங்கு சென்றானோ என்று எனக்குத் தெரியவில்லை. அவன் என்னிடத்திலே இருந்தது. இந்த வயிற்றிலே—ஒரு புலியானது எப்படிக் குகையிலே படுத்துக்கிடந்ததோ, அதுபோல் இந்த வயிற்றிலே அவன் படுத்துக்கிடந்தான்: அந்தப் புலி மறுபடி வயிற்றிலிருந்து வெளியேறிச் சென்றது. அது எங்கு போனதோ தெரியவில்லை. ஒரு வேளை அது போர்க்களத்துக்குப் போயிருக்கலாம்'' என்று சொல்கிறாள். (கரகோஷம்)

அதாவது மிகச் சிறிய பாடல் நீங்கள் எதற்காகக் கையைத் தட்டுகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்.

அதாவது இந்தப் புலி இன்றைக்குமட்டும் தமிழர்களிடத்திலே தொடர்புகொண்டது ஒன்றன்று. வழிவழியாகப் புலி இனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழர்கள். புலிக்கொடியை இமயமலையிலே பொறித்த வீரம் செறிந்த இனம் இந்த இனம்.

இப்பொழுது இமயமலையிலே ஏறி எல்லோரும் நாங்கள் அங்கே ஏறிவிட்டோம்.



கொடியைப் பொறிக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். அன்றைக்கு எந்த வகையான ஒரு வண்டியும், விரைந்து செல்கிற ஊர்தியும் இல்லாத அந்தக் காலத்திலே இங்கிருந்து பல்லாயிரக்கணக்கான கற்கள் சென்று ஏறமுடியாத—எந்த வகையான செயற்கைக் கருவியும் இல்லாமல், எந்தத் துணையும் இல்லாமல் அந்தப் பனிமலையின் மீது ஏறித் தங்களுடைய வீரத்தை பொறித்தது போல் தங்களுடைய கொடிகளை, கயற்கொடி, புலிக்கொடி, விற்கொடி ஆகிய மூன்று கொடிகளையும் அங்கே பொறித்து மீண்டவர்கள் தமிழர்கள். இது வெறும் வரலாற்றுக் கதையன்று வரலாற்றுச் செய்தி. இதை யாராவது மறுத்தால் உண்மையாகவே நாம்தான் இரக்கப்படத் தகுந்தவர்கள். அவர்களல்ல.

நாம் இன்றைக்கு இருக்கிற நிலையும் அன்றைக்கு இருந்தநிலையும் அவர்களை நம்ப மறுக்கிறது. நம்மைப் பார்த்தால் இவர்களா இப்படிச்செய்திருப்பார்களென்று ஒரு ஏளனமான உணர்ச்சி அவர்களிடத்திலே தோன்றுகிறது. அதற்கு அவர்களா காரணம்? இல்லை, நாம் தான். நம்முடைய வீர மரபு, அந்த நிலை இப்பொழுது நம்முடைய குருதிகளிலும், நரம்புகளிலும் இருப்பதை யாரும் இப்போது நம்பமாட்டார்கள். உண்மையாக இருக்கின்ற உண்மையான தமிழ் உணர்ச்சி இன்றைக்கு நம்முடைய வாயிலே பேசுகின்ற சொற்களிலே இருக்கின்ற உணர்ச்சியைப் பார்க்கின்றபோது நம்க்கு அந்த உணர்ச்சி இருந்திருக்குமா என்றுயாரும் நம்பமாட்டார்கள். இந்தத் தமிழனா அந்த இமய மலையிலே புலிக் கொடியைப் பொறித்தவன்? இவனிடத்திலே பிறந்தவர்களா இப்படி வீரம் செறிந்தவர்களாக இருந்தார்கள்?

''யாண்டுளனோ என வினவுதி, என் மகன் யாண்டு ளனோ என அறியேன்; ஊர் புலி சென்று போகிய கல்லைபோல் ஈன்ற வயிறும் இதுவே, தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே'' என்று சொல்கிறாள் அன்றைக்கு

அவ்வளவு வீரம் செறிந்த பெண்கள், தாய்மார்கள் இந்நிலத்திலே அன்று இருந்தார்கள்! தங்கள் மகன் தமக்கு என்று பயன்படுவதை விட நாட்டுக்காகப் பயன்படுவதையே அவர்கள் வரவேற்றார்கள். எனவே தான் அதைப்பெருமையாகக் கருதினார்கள். அதை வீர மரபாக அந்தப் புலவர்கள் விவந்து அவர்களைப் பெருமைப்படுத்துவதற்காகப் பல பாடல்களை ஆக்கி வைத்திருக்கிறார்கள். இந்தப் பாடலையும், இந்தப் பாடலிலே தெரிகின்ற உணர்ச்சியையும் எண்ணிப் பாருங்கள். அன்றைக்கு இருந்த சொற்கள் இன்றைக்கு நமக்குத்தெரியாது. அன்றைக்கு புலவா எழுதுகிறார். அந்த இனத்தை இன்றைக்கு நமக்குத் தெரியாது. அதேகதை இன்றைக்கும் நிகழ்கிறது. அதே செயல் இன்றைக்கும் நிகழ்கிறது. எனவே தமிழ் இனம் என்றைக்கும் ஒரே மரபு சார்ந்தது. அந்த மரபு நிலையை யாரும் அழித்துவிட முடியாது. ஏதோ இன்றைக்குத் தமிழன் தூங்கலாம். அல்லது நேற்றுத் தூங்கப்போய் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கலாம், அதைப் பாவேந்தர் பாரதிதாசன் மிக அழகாகச்சொல்வார்.

''இன்னலிலே தமிழ்
நாட்டினிலே யுள்ள
எம்மக்கள் துயின்றி
ருந்தார்
அன்னதோர் காட்சி
இரக்க முண்டாக்கி
என் ஆவியில் வந்து
கலந்ததுவே''

என்று அழகாகச் சொல்வார். அதாவது தமிழ் இனமானது துன்பத்திலே தூங்கிக் கொண்டிருக்கிற ஒரு இனமாக இன்றைக்கு இருக்கிறது. இன்பத்தில் தான் எல்லோரும் தூங்குவார்கள், இன்பத்தில்தான் தூக்கமும் வரும். ஆனால் தமிழன் தன்னுடைய மொழியை இழந்து நிலத்தை இழந்து, அரசை இழந்து, பண்பாட்டை இழந்து, நாகரிகத்தை இழந்து மிகவும் துன்பமான ஒரு நிலையிலேயிருந்து தூங்கிக் கொண்டிருக்கிறானே, இவன் எப்படி விழித்தெழப் போகிறான்?

எல்லா இனங்களும் விழித்தெழுந்து நெடுந்தூரம் நடந்து விட்டனவே; தங்களுடைய அரசுக்கொடிகளை நாட்டி விட்டனவே. ஆனால் இவன்—இத்தகைய பெரும் நிலப்பரப்புக்குத் தலைவனாக இருந்த இவன் ஒரு சிறிய கையகல நிலத்துக்குக்கூட இப்பொழுது மற்றவர்களிடம் கையேந்தி நிற்கின்ற நிலை இருக்கின்றதே என்று வருந்தி அந்த வரிகளை எழுதுகிறார். ''இன்னலிலே தமிழ் நாட்டினிலே உள்ள எம் தமிழ் மக்கள் துயின்றிருந்தார்; அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கி என் ஆவியில் வந்து கலந்ததுவே'' என்று எழுதுகிறார். வந்தவர் வஞ்சகர், தமிழைச் செழித்தார். வாழ்வினில் உயர்ந்த பின் தமிழையே அழித்தார்; நம் செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்; நாம் உணர்ந்தோம் இந்நாள் அவர் அஞ்சி விழித்தார்'' என்று எழுதுகிறார்.

இந்த நிலைகளையெல்லாம் நாம் எண்ணத் தவறி விடுகிறோம். எனவே தான் நீங்கள் இந்த ஒரு பெரிய மரபின் வழிநிலை இனமாக நினைத்துக் கொள்ள வேண்டும். உண்மையான தமிழுக்கு நாம் சொந்தக்காரர்கள், உயர்ந்த பெயர் எடுத்தவர்கள். நாம் இழந்து போன அந்தமரபுகளை மீட்க வேண்டுமானுல் நம்முடைய மொழிப் பெருமைகளை நாம் காத்துக் கொள்ள வேண்டும். தாய் தமிழிலே பேச வேண்டும். தாய் தமிழிலே எழுத வேண்டும். தாய் தமிழை நாம் வளர்க்கவேண்டும். உண்மையான தமிழ்ப் பெயரை நாம் சூட்டிக் கொள்ள வேண்டும். உண்மையான தமிழ்ப் பெயரை நம் மக்களுக்குச் சூட்டவேண்டும். அப்போது தான் நம்முடைய உணர்வை நாம் பெறமுடியும். அந்த உணர்வுதான் நம்மைக் கட்டிக்காக்க முடியும். அப்படிக் கட்டிக் காக்கத் தவறிய அந்த நிலையிலே தான் நமக்குப் பல வகையான இன வீழ்ச்சிகளும், இன அழிவுகளும் நேருகின்றன. இந்த இன அழிவுகள் இன்றைக்கு நேரலாம். ஆனால் நாளைக்கு நாம் நம்மை உணர்கிறபோது அது எளிதாகத் தளர்ந்து போகலாம். ''நம்மை நாம் உணர்ந்தோம், இந்நாள் அஞ்சி விழித்தார்'' என்று சொல்கின்ற அந்த நிலை வரவேண்டும்.

---

# நவம்பர் முதல் திகதியில் நாடு பிரிகிறது!

1978 நவம்பர் முதலாம் திகதியிலிருந்து தமிழ் ஈழமும் சிங்கள சிறிலங்காவும் தனித்தனிநாடுகளாகப் பிரிகின்றன என்று நான் சொன்னால் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடையாதீர்கள்!

ஒரு நாட்டிலிருந்து, இன்னேர் நாட்டுக்கு செல்வதற்குத்தான் பாஸ்போர்ட் தேவை—

ஒரு நாட்டிலிருந்து இன்னேர் நாட்டில் போய் இறங்கும் போதுதான் சுங்கப் பரிசோதனை நடைபெறும்!

உள்ளூரில் நடைபெறும் விமான சேவையின் போது இந்த நடைமுறை உலகில் எந்த நாட்டிலும் பின்பற்றப்படுவதில்லை.

நவம்பர் முதல் திகதியிலிருந்து சிங்கள சிறிலங்காவின் தலைநகரான கொழும்பிலிருந்து தமிழீழத் தலைநகரங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்துக்கு விமானத்தில் சென்றாலும் சரி — அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விமானத்தில் சென்றாலும் சரி ஒவ்வொரு பயணியும், பாஸ்போர்ட் அல்லது அடையாள அட்டை வைத்திருக்க வேண்டுமென்று விமான சேவையினர் அறிவித்துள்ளனர்.

பயணிகள் கொண்டு செல்லும் சூட்கேஸ், பெட்டி படுக்கை யாவும் (சுங்கப் பகுதியினரால்?) கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவு ஒரே நாடாக இருந்தால் இந்தக் கெடுபிடிகளும் சட்டவிதிகளும் தேவையில்லை;
விமானப் போக்குவரத்துச் சட்டங்களின்படி நவம்பர் முதல் திகதியிலிருந்து சிங்கள சிறிலங்காவும், தமிழ் ஈழமும் தனித்தனியாகப் பிரிகின்றன.
அவ்ரோ விமான எரிப்பின் பிரதிபலிப்பே இது!

இப்போது கூறுங்கள்— நாடுபிரிவதாக நான் கூறியது சரிதானே!

— கோவை:

---

# சிங்க(ள)க் கொடிக்கு சட்டப் பாதுகாப்பு!

(சிங்கள) சிறிலங்காவின் தேசியக் கொடியான சிங்கக் கொடிக்கு மரியாதையும், கௌரவமும் செலுத்தாதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய முறையில் சட்டமொன்று கொண்டுவரப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதாம். இச்சட்டத்தின் படி தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்தத் தவறுவோர் சட்டரீதியாக தண்டிக்கப்படலாம்.

இச்சட்டம் நிறைவேறுமானால் சட்டமறுப்புப் போராட்டத்துக்கு தகுந்த ஓர் களமாக இதைப் பயன்படுத்த முடியும் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. தமிழீழ மக்கள் நேரடியாகச் சட்டமறுப்பில் பெருமளவில் பங்குபற்றஇச் சட்டம் உதவும் என்றும் கூட்டணி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து காசி ஆனந்தன் கடிதம்

# மாவட்ட அமைச்சர் பதவிகளை கூட்டணி ஏற்கலாமா கூடாதா?

தமிழர் விடுதலைக்கூட்டணி மாவட்டங்கள் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்கலாமா கூடாதா என்பது குறித்து தனது கருத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் மட்டக்களப்பு தொகுதி த. வி. கூ. செயலாளருமான உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து கூட்டணித் தலைவருக்கும் செயலதிபருக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் விளக்கியுள்ளார். அக்கடிதம் கீழே இடம் பெறுகிறது.

சிறைச்சாலை,
மட்டக்களப்பு.
20-10-78.

உயர்திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்
செயலதிபர்,
உயர்திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள்,
தலைவர்
தமிழர் விடுதலைக் கூட்டணி.

பேரன்புடையீர்!

பத்திரிகையில் அண்மையில் வெளிவந்து கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பதா இல்லையா என்னும் பிரச்சினை பற்றி ஆராய்ந்து பார்த்த பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணி எக்காரணத்தைக் கொண்டும் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்கக்கூடாது என்னும் ஆணித்தரமான எனது முடிவை கூட்டணியின் ஒரு மத்திய குழு உறுப்பினர் என்ற முறையில் தங்களுக்கும் ஏனைய மத்திய குழு உறுப்பினர்களுக்கும் அறியத் தரும்நோக்கோடு இதனை வரைகின்றேன்.



தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்கக் கூடாது என்று நான் வலியுறுத்துவதற்கான காரணங்கள் கீழே தரப் படுகின்றன.

(1) தமிழர் விடுதலைக் கூட்டணியை துவக்கிய போது தந்தை செல்வா ஒரு கருத்தை வெளியிட்டார்.

"சிங்கள மக்களின் இரு பெரும் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியோடும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியோடும் சேர்ந்து உரிமைகளைப் பெறுவதற்காக நாம் இருபெரும் ஒப்பந்தங்களை கடந்த காலங்களில் செய்தோம். இரு தடவைகளும் நாம் ஏமாற்றப் பட்டோம். இனி சிங்கள மக்களை நம்பி—சிங்கள அரசாங்கங்களை நம்பி எமது பிரச்சினையைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை நமக்கில்லை. மூன்றாவது தடவையும் நாம் ஏமாற மாட்டோம். தமிழர்கள் இனி சிங்கள மக்களை நம்புவதை விடுத்து—தங்கள் சுயநிர்ணய உரிமையைத் தாங்களே தீர்மானிப்பவர்களாக ஆக வேண்டும். ஒரு கஷ்டமான சோதனை நிறைந்த போராட்டத்தின் மூலமே சுதந்திரத் தமிழீழத்தைக் காண முடியும்"

இப்படித் தந்தை கூறினார். இன்று அரசாங்கத்தின் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பதன் மூலம் நாம் சிங்கள அரசாங்கமொன்றை மூன்றாவது தடவை நம்புகின்றவர்களாகவும் ஏமாறுவதற்கு ஆயத்தமாகிறவர்களாகவும் ஆகிறோம். தந்தை செல்வாவின் பெரிய அனுபவத்தை உதாசீனம் செய்கிறவர்களாகவும் ஆகின்றோம்.

(2) சுமார் 30 ஆண்டு காலமாக தந்தை செல்வா எங்களை ஒரு சுதந்திர இயக்கமாக வளர்த்து வந்திருக்கிறார். மாவட்ட சபையை நிறுவும் நோக்கோடு அதற்கான சட்ட மூலத்தை உருவாக்கும் பொருட்டு ஒருவரை அமைச்சராக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்ட போது கூட மக்களால் தெரிவு செய்யப்படாத ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாத திரு. திருச்செல்வம் அவர்களையே அமைச்சராக்கினார். தமிழ் மக்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் ஒரு விடுதலை இயக்கம் என்ற நிலையிலிருந்து ஓர் அணுவும் கீழே விழுந்துவிடக் கூடாது என்று தந்தை கருதினார். தந்தை காட்டிய புனித வழியில் இருந்து நாம் தவறலாமா?

(3) ஒரு மாவட்ட அமைச்சரின் அதிகாரங்களை அரசியல் அமைப்பு வரையறை செய்யவில்லை. இந்நிலையில் தமிழ் மாவட்டங்களை காப்பாற்றும் அதிகாரம் மாவட்ட அமைச்சர்களுக்கு உண்டு என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்? ஜே. ஆர். போன்ற ஒரு தனி மனிதனின் பேச்சை நம்பி மாவட்ட அமைச்சராவது அரசியல் விவேகமாகுமா?

(4) முழு அமைச்சர் பதவியாக இருந்தாலும்சரி, துணை அமைச்சர் பதவியாக இருந்தாலும் சரி, மாவட்ட அமைச்சர் பதவியாக இருந்தாலும் சரி—நாமேற்போமானால்-நாங்கள் அரசாங்கத்தின்ஏதோவோர் அமைச்சர்பதவியொன்றை ஏற்கிறோம் என்பது தான் அர்த்தம்! மாவட்ட அமைச்சர் என்பவர் அரசாங்கத்தின் மாவட்ட அமைச்சரே. நாங்கள் இப்பதவியை ஏற்றால் நாங்கள் மாவட்ட அமைச்சராக இருக்கும் ஓர் அரசாங்கம் எங்களை அடிமையாக வைத்திருக்கிறது என்று சொல்லலாமா? நாங்கள் ஏதோவொரு அமைச்சர் பதவியை ஏற்கும் அரசாங்கம் எங்கள் அரசாங்கமாகாதா? எங்கள் அரசாங்கம் எங்களைத் துன்புறுத்துவதாகஎப்படிச்சொல்லுவது?

(5) மாவட்ட அமைச்சர் பதவி கிடைத்தால் தமிழர் பகுதியில் நடக்கும் சிங்களக்குடியேற்றத்தை தடுக்கக் கூடியதாக இருக்கும் என்று இன்று பேசப்படுகின்றது. ஏழு தமிழ் மாவட்டங்களிலும் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பது என்று நாம் முடிவு செய்தால்—அடுத்த நிமிடமே ஜனாதிபதி மதுருஓயாத் திட்டத்தைக் கைவிடுவாரா?

இது நடக்கக் கூடிய காரியமா? தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்ட அமைச்சர் பதவிகளை ஏற்பதால் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கலாமென்பது ஓர் அர்த்தமற்ற வாதமாகும்.

(6) திரு. தேவநாயகம் இன்று முழு அமைச்சராக இருக்கிறார். அரசாங்கத்தின் ஒரு முக்கிய செல்வாக்குள்ள அமைச்சராக இருக்கிறார். கடந்த ஆட்சிக்காலத்தில் புனானை—புனானை சார்ந்த இடங்களில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுப்பதில் திரு. தேவநாயகம் அக்கறை காட்டியவர். குடியேற்றப் பிரச்சினையில் அக்கறையுள்ள தேவநாயகம் ஒரு முழு அமைச்சராக இருந்தே மதுறு ஓயாவைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. தமிழ்ப் பகுதிகளில் குடியேறிய அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்க முடியவில்லை. முழு அமைச்சராலேயே முடியாத காரியத்தை மாவட்ட அமைச்சர்களால் சாதிக்க முடியுமா?

(7) மாவட்டங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு கடந்த ஆட்சிக் காலத்தில் அரசியல் அதிகாரிகளை சிறிலங்கா சுதந்திரக் கட்சி நியமித்தது. தமிழ்ப் பகுதிகளில் அவ்வாறு அரசியல் அதிகாரிகளான தியாகராசா, அருளம்பலம் ராஜன் செல்வநாயகம் ஆகியோரை கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் தோற்கடித்தார்கள். மாவட்ட அபிவிருத்தியைவிட விடுதலை முக்கியமென்று கருதியே மக்கள் அப்படிச் செய்தார்கள். மக்கள் அந்த அரசியல் அதிகாரிகளை தோற்கடித்து அவ்விடங்களுக்கு நம்மை நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்தார்கள். தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்ட அதே அரசியல் அதிகாரிகள் பாணியில் அமைந்தமாவட்ட அமைச்சர் பதவிகளை இன்று நாம் ஏற்கலாமா?

(8) அரசாங்கத்தின் மாவட்ட அமைச்சர் பதவியை நாமேற்றுக்கொண்டால்—அரசாங்கத்தில் சேர்ந்து ஏற்றுக்கொண்டாலும் சரி—அரசாங்கத்தில் சேராமல் ஏற்றுக்கொண்டாலும் சரி—நாம் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கின்றோம் என்றுதான் அர்த்தம். இந்த ஒத்துழைப்பு நிலை சரியானது தானா?

( ) நம்மவர்கள் மாவட்ட அமைச்சர்களானால் நம் மாவட்டங்களுக்கு வரும் ஜனாதிபதி, பிரதமர் உட்பட ஏனைய அமைச்சர்களை வரவேற்கவும் அவர்களுக்கு தமிழீழப் பகுதிகளில் மேடை அமைத்துத் தரவும் மாலை மரியாதைகள் செய்யவும் தமிழீழக்கொள்கைக்கு முரணான கொள்கையை நமது மேடைகளில் அவர்கள் முழங்கவும் ஆன ஒரு நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். இந்நிலை நம் இயக்கத்தைப் பாதிக்காதா? மக்கள் மனதில் குழப்பம் ஏற்படாதா?

(10) நமது இயக்கத்தின் மதிப்பு பெருமளவு வளர்ந்து வரும் வெளிநாடுகளில் நாம் மாவட்ட அமைச்சர் பதவி ஏற்றுவிட்டபின்பு இலங்கையில் எல்லாப் பிரச்சினையுமே தீர்ந்துவிட்டது என்று அரசாங்கம் மேற்கொள்ளும் பிரச்சாரம் நம்மைப்பற்றி ஒரு தவறான உணர்வை ஏற்படுத்தாதா? தளைத்துவரும் வெளிநாட்டு ஆதரவு தளர்ந்து போகாதா?

(11) தமிழர் நிலையை சரிவரப்புரிந்துகொண்டு தமிழர்களுக்கு ஓரளவு உதவிசெய்ய வேண்டுமென்று விரும்பும் ஒரு ஜனாதிபதியே தமிழ் மாவட்டங்களை (தமிழர் குடியேற்றம் உட்பட) அபிவிருத்தி செய்ய வேண்டுமென்னும் நோக்கோடு மாவட்ட அமைச்சர் பதவிகளை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்குவார். ஆனால் தமிழர்களுக்கு உதவவேண்டும் என்ற பரிசுத்தமான இந்த உணர்வு ஜே. ஆர். அவர்களிடம் உண்டா?

ஆட்சிக்கு வந்தவுடன் வடக்கு கிழக்கு நிலப்பரப்பை தமிழரின் பிரதேசமென நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம் எனக் கூறியவர் திரு. ஜே. ஆர். பின்பு சிங்களவர்களை தமிழ்ப் பகுதியில் குடியேற்றுவேன் என்று கூறியவர் திரு. ஜே. ஆர். பின்பு வவுனியாவிற்கும், திருகோணமலைக்கும் சிங்களவர்களை மாவட்ட அமைச்சர்களாக்கியவர், திரு. ஜே. ஆர். இவர் வழங்கும் மாவட்ட அமைச்சர் பதவி தமிழர்களின் நன்மைக்காக இருக்குமென்று நம்பலாமா?

(12) கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் ஈழ மக்கள் தமிழ் ஈழத்திற்கென தனியான ஓர் தேசிய மன்றத்தை அமைப்பதற்கான ஆணையை எமக்கு அளித்தார்களே தவிர—நம்மை அடிமையாக வைத்திருக்கும் ஓர் அரசாங்கத்தில் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பதற்கான அங்கீகாரத்தை வழங்கவில்லை. மாவட்ட அமைச்சர் பதவியை நாமேற்பது மக்கள் நமக்கு அளித்த ஆணையை நாம் மீறுவதும், அவர்களுக்கு நாம் துரோகம் செய்வதுமாகாதா?

மேலே கூறிய காரணங்களால் தமிழர் விடுதலை கூட்டணி மாவட்ட அமைச்சர் பதவியை எந்த நிலையிலும் ஏற்கக் கூடாது எனும் எனது முடிவை நான் மத்தியகுழுவின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

ஒவ்வொரு அடியை நாமெடுத்து வைக்கும் போதும் உலகம் நம்மை உன்னிப்பாகக் கவனிக்குமளவிற்கு நாமொரு பெருமியக்கமாக வளர்ந்திருக்கிறோம். தமிழினம் நம்மிடத்தில் வைத்த நம்பிக்கை தொடர்ந்து நிலைபெற தமிழர் போராட்டம் மேலும் வலுவடைய-', தமிழீழம் மலர—தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொறுப்புமிக்க மத்தியகுழு உறுப்பினர்களாகிய நாம் தவறு விடாமல் இருப்போமாக.

இவ்வண்ணம்

காசி. ஆனந்தன்;

மத்திய குழு உறுப்பினர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் புகட்டுகிருன் பண்டார வன்னியன்!

அன்பு நண்பா,

அன்னியன் ஆட்சிக்கு ஒருபோதும் அடிபணியேன்; மாற்ருனுக்குக் கப்பம் கட்டி வாழ்கின்றவன் அல்ல மானத் தமிழன்; அவன் இந்த மண்ணின் சொந்தக்காரன்; மானமும் வீரமும் அவனிருகண்கள்; மாற்ருனிடம் நவீன ஆயுதபலமும், படைபலமும அதிகம் தான் என்ருலும், அதற்குப் பயந்து அவனிடம் மண்டியிடமாட்டேன்; பீரங்கியைத் தூள் தூளாக்கும் ஆற்றல் என் நெஞ்சத்திலேபீறிட்டெழும் சுதந்திர ஆவேசத்துக்கு உண்டு; துப்பாக்கியைத் தூள் தூளாக்கும் ஆற்றல் களத்திலே சுழன்ருடும் என் கைவாளுக்கும்தோளுக்குமுண்டு; மாற்ருனிடம் மண்டியிடவும் மாட்டேன், மன்னிப்புக்கேட்கவும் மாட்டேன், சலுகையை யாசித்துப் பெறவும் மாட்டேன்; சமரசம் பேசவும் மாட்டேன்; மாற்ருன் தலையைஇந்தமண்ணில் உருட்டுவேன்;அல்லது என் தூய இரத்தத்திஞல் இந்த மண்ணைக் குளிப்பாட்டுவேன்; இந்த வன்னி மண்ணை—நமது தமிழ் மண்ணைக்காத்திட கடைசித் துளிவரை களத்தில் நின்று போராடுவேனே தவிர-கையாலாகாதநிலையில் களத்தை விட்டு ஓட மாட்டேன்; எதிரியிடும் பிச்சைக்கு, அற்ப சலுகைக்கு கையேந்தமாட்டேன்; ஒன்றில் இந்தமண் காக்கப்படும், அடிமைத்தனம் துடைத்தெறியப்படும், ஆதிக்க வெறியர்களின் இடுப்பு ஒடிக்கப்படும்; அல்லது இந்த மண்ணில் என் உடல் சாயும்; எனது குருதியிஞல் இந்த மண்ணைக் குளிப்பாட்டுவேன்; என்று வீரசபதம் செய்து வஞ்சினம் கொண்டு வெள்ளையருடன் போரிட்டு அவர்களைக் கதிகலக்கிய வன்னி மண்ணின் வீரத்தலைவன்—மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவுதினம் அக்டோபர் 31 என்பதை நீ மறந்திருக்கமாட்டாய்!

175 ஆண்டுகளுக்குமுன்—1803ம் ஆண்டு அக்டோபர் 31ம் நாள்தான், கள்ளமாக வந்த வெள்ளையரை அதுவரை கதிகலக்கிநின்ற வீரவேங்கை பண்டாரவன்னியன் துரோகியொருவஞல் காட்டிக்கொடுக்கப்பட்ட நிலையில் கற்சிலைமடுவல் வெள்ளைத் தளபதியால் சிறைபிடிக்கப்பட்டான்!

1619ம் ஆண்டு போர்த்துக்கீயரிடம் யாழ்ப்பாண அரசு விழ்ச்சியுற்றபின்ஞலும்—1803வரை ஈழத்தில் தமிழனின் ஆட்சியை கட்டிக்காத்து வந்த பெருமை வன்னியர்களுக்கேயுரியது. அந்த வீரம் செறிந்த மக்களின் தலைவஞகவிளங்கிய மன்னன்தான் பண்டார வன்னியன்!

பண்டாரவன்னியன் அன்று சற்றுத் தளர்ச்சியடைந்திருந்தால்— விட்டுக்கொடுத்திருந்தால்—சலுகைக்கு மண்டியிட்டிருந்தால்-அன்னிய ஆட்சிக்கு அங்கீகாரம் அளித்திருந்தால் —கப்பம் கட்ட இணங்கியிருந்தால்—ஆங்கில ஆட்சியின் கீழ் அவன் ஓர் குறுநில மன்னஞக (இன்று சிங்கள ஏகாதிபத்திய ஜே. ஆர். ஆட்சியின் கீழ் மாவட்டமந்திரி போல) தொடர்ந்து ஆட்சியில் இருந்திருக்க முடியும்; அடிமை அரசஞக விளங்கியிருக்க முடியும்!

ஆஞல் அவனே ஒரு சுத்த வன்னியன்; தமிழ் மரபினன்; தன்மானவீரன்; அடிமைத்தனத்தை அணுவளவும் சகித்துக்கொள்ளாத அடலேறு; ஆண்மையின் இருப்பிடம்; சுத்த சுதந்திர வீரன்; அன்னியனுக்குக் கப்பம் கட்டி அரசுபுரிவதை அவன் அடியோடு வெறுத்தான்; அடிமைத்தனத்தை ஏற்றுக்கொண்டு பெறுகின்ற சலுகை, பிணத்துக்குப் போர்த்தும் பட்டாடை போன்றது என்பதை அவன் அறிவான்; எனவே தான் தனது சுகத்துக்காக, தனது நலனுக்காக— வன்னிநாட்டு மக்களை அன்னிய வெள்ளையனுக்கு அடிமைகளாக்குவதை அவன் வெறுத்தான்; சுத்த வீரனுக்குள்ள ஒரேவழியில் அவன் யுத்தமுனையொன்றையே நாடிஞன்!

எதிரிகளிடம் படைபலம், பணபலம், அனைத்தும் உண்டு; அவன் அறிவான்; வன்னி மண்ணை ஆக்கிரமிப்பதற்கு நான்கு முனைகளிலும் எதிரிகள் சதிசெய்ததை அவன் அறிவான்; வன்னிமண்ணைச் சுற்றி எதிரிப்படைகள் குவிக்கப்பட்டதை அவன் அறிவான்; நான்கு பக்கமும் நெருக்கடிகளும் துன்பங்களும் சூழ்ந்த அந்த நிலையிலும் பண்டார வன்னியன் துளியும கதிகலங்கவில்லை; எதிரிகளின் திட்டங்களையும், படைபலத்தையும் கண்டு அவன் கிஞ்சிற்றும் மிரளவில்லை; களத்தைவிட்டு ஓடவோ, சரணுகதியடையவோ, கிஞ்சிற்றும் அவன் எண்ணவில்லை; வன்னி மக்களை அவலத்தில் விட்டு விட்டுத் தான் ஓடி மறைய முயலவும் இல்லை!

கடமையைச் செய்வோம் பலனை எதிர்பார்க்காமல் என்ற விடுதலை வீரனுக்குரிய ஒரே சிந்தனையுடன் — அடிமைத்தனத்தை பொடிப்பொடியாக்கிடும் ஒரே ஆவலுடன் — அன்னிய ஏகாதிபத்திய ஆட்சியை இந்த மண்ணிலிருந்து ஓடோட விரட்ட வேண்டுமென்ற ஒரே இலக்குடன் களத்தில் குதித்து, தன்வலிமையெல்லாம் திரட்டிப் போராடிய பண்டாரவன்னியன், இறுதியிலே தன் சொந்த இனத்துத் துரோகியொருவஞல் காட்டிக் கொடுக்கப்பட்டானென்ருலும், இன்றைக்கும் என்றைக்கும் நம் நெஞ்சிலே— வாழுகிருன்; வரலாற்றுக் காவியமாகி விட்டான்!

இன்றைக்கு சிங்கள சிறீலங்கா சுதந்திரமடைந்து விட்ட காரணத்திஞல், யார்யாருக்கெல்லாமோ சிலைகள் திறக்கப்படுகின்றன—நினைவு முத்திரைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. 'புரான் அப்பு' என்று நாம் முன்பின் கேள்விப்படாதவர்களுக்கெல்லாம் அங்கே சிலை; 1815ம் ஆண்டு முஸ்லிம் — சிங்களக் கலவரத்தின் போது முஸ்லிம்களை




கொன்ருெழித்த பேதிரிஸ் என்பவனுக்கும் அங்கே சிலை; நாமோ அன்னிய ஆட்சியை எதிர்த்து போரிட்டு உயிர் நீத்த சங்கிலி மன்னன், வர்ணகுலத்தான், பண்டாரவன்னியன் போன்றவர்களுக்கு சிலையெடுத்து நினைவுகூர முடியாத நிலையில் இன்னும் அடிமைச் சேற்றுள் அழிந்து கொண்டிருக்கிருேம்;

400 ஆண்டுகளுக்கு முன்சங்கிலியனும், அடுத்து வர்ணகுலத்தானும், இறுதியில் பண்டாரவன்னியனும் தொடர்ந்து நடத்திவந்த தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் இன்னும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது; நமது நாடு இன்னும் நமக்காக வில்லை; நமது அடிமை விலங்கு இன்னும் உடைக்கப்படவில்லை; நமது இறைமையையும் ஆட்சியுரிமையையும் நாமே அனுபவிக்கக்கூடிய நிலையில் நமது இனம் இன்று இல்லை—

ஒரேயொருவித்தியாசம்; அவர்கள் அன்று அன்னிய போர்த்துக்கிய, ஆங்கிலேய ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகப் போராடிஞர்கள்; இன்று நாம் அயல் நாட்டுச் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிருேம்—

பண்டாரவன்னியன் சலுகைகளில் மயங்கி தனது அரசுரிமையை அடகு வைக்க மறுத்து எவ்வாறு ஆண்மையுடனும்—விடுதலை உணர்வுடனும் அன்னியனுடன் போராடிஞனே—வெள்ளையனுக்குக்கப்பம் கட்டி குறுநில மன்னன் என்ற அடிமை நிலையை ஏற்க மாட்டேன் என்று உறுதியுடன் எவ்வாறு களமாடிஞனே—அதேபோலத்தான் தமிழ் ஈழத்தின் பூரண சுதந்திரம் ஒன்றையே விசுவாசிக்கும் நாம்—சுதந்திர, இறைமையுள்ள மதசார்பற்ற சோசலிசத் தமிழீழ அரசு ஒன்றை உருவாக்கப் போவதாக் தமிழ் மக்களிடம் தெட்டத் தெளிவாக வாக்குத்தத்தம் கொடுத்திருக்கும் நாம் — சிங்கள ஏகாதிபத்தியம் பிச்சையாகப்போடும் மாவட்ட மந்திரியென்ற ''குறுநில'' அந்தஸ்துக்காக தமிழ் ஈழமக்களின் இறைமையையும் தனிநாடாக இயங்குவதற்கு அவர்களுக்குள்ள அரசுரிமையையும் தத்தம் செய்ய மாட்டோம் என்று [illegible] விளைவைப் பொருட்படுத்தாது போராட்டப்பாதையிலே முன்னேற வேண்டுமே தவிர தயக்கம் காட்டுவதற்கோ — தடுமாறி நிற்பதற்கோ—கிழக்கு, வடக்கென்று பிரதேசப் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்திப் பேசுவதற்கோ—நம்மிடம் திட்டமில்லையென்று எதிரிக்கு வெளிச்சம்போட்டுக்காட்டுவதற்கோ இதுவா தருணம்?

நமது எதிரியான சிங்கள வல்லாட்சியின் தலைவரான திரு. ஜே. ஆர். மிகுந்த சாணக்கியர்; ஈழத்தமிழினத்தின் இன்றைய ஒரேயொரு விடுதலைப்பேரியக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சிதைப்பதன் மூலம், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தையே முறியடித்துவிடலாமென்று அவர்கனவு காணுகிருர்; அதற்காகவே மாவட்ட மந்திரி என்கிற மோகினியை தமிழீழத் தவம் செய்யும் கூட்டணிப் பா. உக்களின் முன்ஞல் அவர் ஆடவிட்டிருக்கிருர்.

மாவட்ட மந்திரியென்ற மோகினியின் மயக்கத்தில், தமிழீழத் தவத்தை இடைநடுவில் கைவிட்டு, மோகினியின் பின்ஞல் கூட்டணிசென்றிடுமோ என்ற அச்சம் விடுதலை விரும்பிகளின் உள்ளங்களை இன்று அலைக்கழிக்கிறது; அதற்கு ஏற்ருற்போல் சில பா. உக்கள் அரைக்கண்ணுலும், குறைக்கண்ணுலும் மாவட்ட மந்திரியென்ற மாயமோகினியைப் பார்த்து ரசிக்கிருர்கள்.

எப்படியாவது விடுதலை இயக்கத்தை மண்டியிடச் செய்துவிடுவதற்காக சிங்கள ஆட்சிபலவிதமிரட்டல்களையும் தமிழினத்தை நோக்கி விடுக்கிறது; எந்த விதப்பயமுறுத்தல்களுக்கும் பணிய மாட்டோம்; எம்மைப் பயமுறுத்திப் பணியவைக்கவும் முடியாது; என்று சேர். பொன். இராமநாதனும்,சேர். அருணுசலமும், தந்தை செல்வாவும், அவர் வழிவந்த தமிழினத்தலைவர் நாவலர் அமிர்தலிங்கமும் முழங்கியதுபோல வீரகர்ச்சனை புரியவேண்டிய பண்டாரவன்னியனின் பரம்பரையினர், அஞ்சியும் கெஞ்சியும் வாழ ஒருபோதும் ஒருப்படமாட்டார்கள் என்பதை நான் அறிவேன்!

உலகம்டங்கும் தமிழீழப் பிரச்சினை இன்று எதிரொலிக்கிறது; தமிழர்விடுதலைப்போராட்டம் பற்றிய இலக்கியங்கள் வெளிநாடுகளில் நிறைகின்றன; சிறிலங்கா ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறை தர்பார் உலகின் கண்களுக்குத் தெரிகிறது; உத்தமர், புனிதர் என்று தம்மைக் கூறிக்கொண்டவரின் பகல் வேஷம் கலைந்து விட்டது. இவரை நம்பி கடன் கொடுக்க உலக நாடுகள் தயங்குகின்றன; இனவெறி நாட்டுக்கு உதவுவதா என்று வேறு சில நாடுகள் கேள்வியெழுப்புகின்றன. எனவேதான் ஆத்திரப்படுகிருர்— தடுமாறுகிருர் அதி உத்தமர்; அதன் பிரதிபலிப்பாகத்தான் கூட்டணியை குழப்பிவிடப்பார்க்கிருர்; பயமுறுத்தியோ பாசாங்கு செய்தோ— சலுகை காட்டியோ இதமாகப்பேசியோ கூட்டணியை தன்பக்கம் இழுத்துவிட முயற்சிக்கிருர்; அதற்குசிலரைப்பயன்படுத்துகிருர்! இதுதான் நிலைமை.

இந்த நிலையில் தமிழ் இளைஞர்களின் உறுதியும்; இலட்சிய வேகமும், விடுதலையொன்றேயன்றி வேறு சிந்தனையற்ற தியாக உள்ளமும்தான் கூட்டணியை விடுதலைப்பாதையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். கூட்டணி தமிழ் மக்களின் விடுதலை இயக்கம்; தமிழ் இளைஞர்களின் தியாகத்தத்திஞல் —உயிர்த்தியாகத்திஞல்— தன்னலமற்ற பணியிஞல் உருவாக்கப்பட்ட இயக்கம்; கொள்கையை முன்னிறுத்தித்தான் கூட்டணி இயங்க வேண்டுமே தவிர—தனிப்பட்டவர்களின் எண்ணப்படியோ சிந்தனைப்படியோ அல்ல; இயக்கத்துக்கு முன்— இலட்சியத்துக்கு முன்— தனிப்பட்டவர்கள் எவரும் தூசு தான்!

எனவே இளைஞர்கள் கூட்டணியிலிருந்துபிரிந்து செல்கின்ற மனப்பான்மையை எந்தக் கட்டத்திலும் தவிர்த்து— கூட்டணியை தொடர்ந்தும் தமிழீழப் பாதையிலே நடத்திச் செல்லும் சக்தியையும் ஆற்றலையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும்.

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. போ. சபைக்கே இக்கதியென்ருல்?

ஜனதிபதியினதும், அரசாங்கத்தினதும் கொள்கைக்கும் நேரடிக் கட்டுப்பாட்டுக்கும் இசைவாக ஒழுக வேண்டிய மாவட்ட மந்திரி பதவியை கூட்டணி ஏற்பதால், பறிபோகும் தமிழ் மண்ணைப்பாதுகாக்க முடியுமா? சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியுமா? தமிழ் மக்களைக் குடியேற்ற முடியுமா?

முடியாது முடியாது முடியாது என்பதற்கு இதோ ஓர் சிறு உதாரணம்—

வடபிராந்திய இ. போ. சபையைப் பற்றி யாரோ சிலர் அமைச்சர் சிறில் மத்தியூவிடம் புகார் செய்திருக்கிருர்கள்—

வடபிராந்திய சபையில் அரசாங்கத்தை ஆதரிக்காதவர்களும் இருக்கிருர்கள் என்றும்—

அரசின் உத்தரவுக்குப் பணிந்து பேருந்துகளுக்கு பச்சை வண்ணம் அடிக்காமல், வட பகுதியில் மஞ்சள் வண்ணம் அடிபடுகிறது என்றும்—

வடபிராந்திய போக்குவரத்துச்சபை மத்திய சபையின் கொள்கைகளுக்கு புறம்பாகத் தன்னிச்சையாக நடப்பதாகவும் — யாரோ சில ஆளுங்கட்சி எடுபிடிகள் புகார் செய்திருக்கிருர்கள் அமைச்சர் சிறில் மத்தியூவிடம்!

அமைச்சர் சிறில் மத்தியூ இந்தப் புகார்களை ஜனதிபதி ஜே. ஆரின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டு வந்திருக்கிருர்—

இதையடுத்து மேற்படிபுகார்களை விசாரிப்பதற்கு ஒரு குழுவை ஜனதிபதி நியமித்திருக்கிருர்—

சாதாரண இ. போ. சபைக்கே யாரோ கொடுத்த புகார் மீது இவ்வளவு கெடுபிடியும் விசாரணையுமென்ருல்—

மாவட்ட அமைச்சர் தன்னிச்சைப்படி நடப்பதை—அதுவும் தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த மாவட்டஅமைச்சர்கள் தன்னிச்சைப்படி நடப்பதை அமைச்சர் சிறில் மத்தியூபோன்றவர்களும் ஜனதிபதியும் விட்டு வைக்கவா போகிருர்கள்?

மாவட்ட அமைச்சர்கள் அரசுக்குப்பணிந்து அதன் கொள்கைகளுக்கு அமைவாக நடக்க வேண்டும். அல்லது அவர்கள் அடுத்த விநாடியே பதவியிலிருந்து தூக்கியெறியப்படுவார்கள்!

இதை நன்கு தெரிந்து கொண்டும் கிணற்றுக்குள் கூட்டணி ஏன் தாஞகப் போய் விழ வேண்டும்? குளிக்கப்போய் ஏன் சேறு பூசிக்கொள்ள வேண்டும்?

—கோவை

# திருக்குறள் முன்னணிக் கழகத்தின் சீரிய பணி வெல்க!

எங்கும் தமிழ்—எதிலும் தமிழ்என்ற கொள்கையை தமிழ் ஈழம் முழுவதும் பரப்புவதற்கு திருக்குறள் முன்னணிக்கழகம் முழுமுயற்சியெடுத்துவருவதை சுதந்திரன் பாராட்டுகிறது.

இக்கொள்கையின் முதலாவது அம்சமாக யாழ்ப்பாண மாநகரத்திலுள்ள தமிழர்களின் வர்த்தக நிலையங்களின் பெயர்ப்பலகைகளில் தமிழுக்கு முதலிடம்அளிக்குமாறு திருக்குறள் முன்னணிக் கழகத்தினர்ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் கடைகடையாகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

எதிர்வரும் பொங்கலுக்கு முன்னர் யாழ் மாநகரின் வர்த்தகநிலைய பெயர்ப் பலகைகள் அனைத்தும் தமிழில் எழுதப்பட்டு விட வேண்டுமென்றும், இன்றேல் தமிழை புறக்கணிக்கும் நிறுவனங்களின் முன்பு தைப்பொங்கல் நாளன்று மறியல் போராட்டம் நடத்தப்போவதாகவும் திருக்குறள் முன்னணிக்கழகம் அறிவித்துள்ளது.

கடந்த 15-10-78 பி. ப. யாழ்ரசிக ரஞ்சன சபாமண்டபத்தில் கூடிய திருக்குறள் முன்னணிக்கழகத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

(1) சமுதாய குறைபாடுகளை நீக்கி சுயமரியாதை சமுதாயத்தை அமைக்கும் பணிக்கே முழுமையாக இக்கழகம் ஈடுபடல் வேண்டும்.

(2) தைத் திரு நாளில் யாழ் நகரில் சிந்தனையை வளர்க்கும்வகையில் கலைவிழாவை நடத்தல்.

(3) 21-10-78ல் (சனிக்கிழமை) 60 தொண்டர்கள் காலை9முதல்ஒவ்வொருவர்த்தக நிலைய அதிபர்களைக் கண்டு தமிழுக்கு முதலிடம் கொடுத்து பெயர்பலகைகளை அமைக்குமாறு வேண்டுகோள்விடல்.

(4) தி. முன்னணிக்கழகத்திற்கு புதிய அமைப்பு விதிகளை தயாரிக்க திரு. மகேஸ்வரன் தலைமையில் ஒரு குழுவும், கலைவிழாவினை ஒழுங்கு செய்ய திரு. சுந்தரலிங்கம் தலைமையில் ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது.


நவம்பர் முதலாம் தேதி—

பத்திரிகை உலகின் விடிவெள்ளி பவனி வருகிறது துள்ளி!

## தீப்பொறி

[ மாதமிருமுறை ]

ஆசிரியர் ம. க. அ. அந்தனிசில்

பக்கம்: 8 விலை சதம் 75

97/1, கே. கே. எஸ். வீதி—யாழ்ப்பாணம்


# பனம் விதைகள் மேலும் தேவை

குடியேற்றப் பகுதிகளுக்கு விநியோகிப்பதற்கு மேலும் பனம் விதைகள் தேவைப்படுவதாகவும் பனம் விதைகளை மேலும் அன்பளிப்புச் செய்யுமாறும் மில்க்வைற் அதிபர் சிவதர்மவள்ளல் கனகராசா வேண்டுகோள் விடுக்கிருர். மில்க்வைற் குழுவினர் விசுவமடுப்பகுதிகளுக்கு எதிர்வரும் 31-10-78ல் பனம் விதைகளை விநியோகிக்கவிருக்கின்றனர்.


## சுதந்திரன் சந்தா

ஓராண்டு ரூபா 50-00

அரையாண்டு ரூபா 25-00


# நிருபரில் ஒரு கருங்காலி!

அண்மையில் யாழ் வளாகத்தில் மருத்துவ பீடத்தை திறந்து வைப்பதற்கு கல்வியமைச்சர் வந்திருந்த போது. பத்திரிகை நிருபர்கள் அவமதிக்கப்பட்டுவெளியேற்றப்பட்டதும் இதன் காரணமாக அவர்கள் குறித்த நிகழ்ச்சியை முற்ருகப் பகிஷ்கரித்ததும் தெரிந்ததே, இச்சம்பவத்தின் போது ஏரிக்கரையின் ஒரேயொரு கருங்காலி நிருபர் மட்டும், தனது சகாக்களுக்குத் துரோகம் புரிந்து அங்கேயே இருந்து மேற்படி நிகழ்ச்சியை எழுதினுராம். ஏரிக்கரையின் மற்ருேர் பெண்நிருபர்கூட வெளியேறி விட்டநிலையில் இவர் மட்டும் அங்கே தனித்து நின்று தனது 'கருங்காலித் தனத்தை' காட்டினராம். இதனல் ஏனைய பத்திரிகை நிருபர்கள் கொதிப்படைந்தனர்.

குறித்த பத்திரிகையின் நிருபர் தாம் எழுதிய செய்தியை கொழும்பிலுள்ள பத்திரிகை ஆசிரியருக்கு அனுப்பிய போதிலும், பத்திரிகை நிருபர்கள் ஒதுக்கப்பட்ட செய்தியை அறிந்த குறித்த பத்திரிகை ஆசிரியர், கருங்காலி நிருபர் அனுப்பிய செய்தியை பிரசுரிக்காது குப்பைத்தொட்டிக்குள் வீசிவிட்டாராம்.

# சாவகச்சேரித் தொகுதி அபிவிருத்திக் கருத்தரங்கு

சாவகச்சேரி தொகுதியின் அபிவிருத்தி பற்றி பல கருத்தரங்குகளை நடத்தவும், திட்டங்களை வகுக்கவும், அவற்றை செயற்படுத்தவும் சாவகச்சேரித் தொகுதி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் அங்குள்ள இளைஞர்கள் திட்டமிட்டுள்ளனர். இது பற்றிய முதல் நிலைக்கருத்தரங்கு திரு. நவரத்தினம் தலைமையில் பா. உ. வின் சாவகச்சேரி அபிவிருத்திப் பணிமனையில் 28-10-78 சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் வட தமிழ் ஈழத்தில் உள்ளதிட்ட நிபுணர்களும், உயர் அதிகாரிகளும் பங்குகொண்டு கருத்துரை வழங்குகின்றனர். சாவகச்சேரித் தொகுதியில் கிடைக்கும் மூலப் பொருட்களை பயன்படுத்தி சிறு கைத்தொழில்களை உருவாக்குவதுபற்றியும் ஆராயப்படும்.

# அனுதாபம்

தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆதரவாளரும் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முன்னுள் செயலாளரும், மெ. மி. த. க. பாடசாலை அதிபருமான கற்கோவளத்தைச் சேர்ந்த திரு. சி. எஸ். கணபதிப்பிள்ளை அண்மையில் காலமாளுர். இவர் தமிழர் விடுதலைப் போராட்டத்தில் சிறைசென்ற சந்திரமோகனின் தந்தையாவர். இவரது பிரிவுகுறித்து கலங்கும் கூட்டணி ஆதரவாளர்களுக்கும், உறவினருக்கும் சுதந்திரன் தன் அனுதாபத்தைத் தெரிவிக்கிறது.

# தப்பும் தவறும் நிறைந்த தமிழர் விடுதலை இயக்க வரலாறு!

தமிழக — ஈழநட்புறவுக்கழகம் என்று சொல்லப்படும் கழகத்தின் சார்பில் அக்கழகத்தலைவர் பேராசிரியர் இளவரசு என்பவர் ஈழத் தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றை விமர்சிக்கும் நூலொன்றை சென்னையில் வெளியிட்டிருக்கிருர். ''இலங்கையில் ஈழம்'' என்பது அந்நூலின் பெயர். இதில் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை பற்றித்தப்பும் தவறுமான பல தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பலமுக்கிய செய்திகள்இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன. தமிழிளைஞர்பேரவையின் அமைப்பாளர் மாவை சேஞதிராசா, கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோருடைய இயக்கப் பங்களிப்புக்கள் பற்றி இந்நூல் இருட்டடிப்பு செய்வதுடன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை மீது காழ்ப்புணர்ச்சியுடன் வேண்டுமென்றே அனுவசியமாகப் பழிசுமத்தப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சியின் முப்பதாண்டு காலப் போராட்டம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது.

—இவ்வாறு இந் நூல் பற்றி நமது சென்னை நிருபர் தெரிவிக்கிருர். நூல் நமது கைக்கு கிடைத்ததும் முழுமையாக விமர்சனம் செய்யப்படும். ஆ-ர்.


## இளைஞர் குரல்

3-வது இதழ் வெளிவருகிறது!

- ★ சுபாஷ் சந்திரபோஸ் வாழ்க்கை வரலாறு
- ★ பாலகங்காதர திலகர்
- ★ பாலஸ்தீனத்தின் தியாக வரலாறு,
- ★ இந்திய சஞ்சிகைகள் என்ன செய்ய வேண்டும்?
- ★ தமிழ் மகளிருக்கு
- ★ ஜலியன் வாலபாக் தரும்பாடம் என்ன.
- ★ வீராங்கனையின் கடைசிச் செய்தி
- ★ விடுதலையா? சரணுகதியா?

இவற்றைத் தாங்கி வெளிவருகிறது.

இளைஞர் குரல்

விலை சதம் 60.

நவம்பர் இதழ் 29-10-78ல் எங்கும் கிடைக்கும்.


# வாராந்தக் கருத்தரங்கு

காலம்:- 28-10-78 (சனிக்கிழமை)மாலை6-30மணிக்கு.

தலைப்பு:- ''பண்டுதொட்டு இன்றுமட்டும் இனக்கொலை தொடர்கிறது இலங்கையில்.''

கூட்டணிப் பிரமுகர் உரை நிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்துக்கு இராசதந்திர அங்கீகாரத்தை வழங்குமாறு இந்தியப் பிரதமரிடம் வற்புறுத்து!

## உலகத் தமிழ்ப் பண்பாட்டுக்கழக இந்தியக் கிளை மகஜர்

"இலங்கைத் தமிழர்கள் தங்கள் சுதந்திரத்துக்காக இன்று போராடிக் கொண்டிருக்கின்றனர். நியாயமான இந்தப் போராட்டத்துக்கு இந்திய அரசாங்கமும் நீங்களும் தார்மீக ஆதரவையும், ஏனைய உதவிகளையும் வழங்கவேண்டும். அத்துடன் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளையுள்ளடக்கிய தமிழ் ஈழ நாட்டுக்கு உங்கள் இராசதந்திர அங்கீகாரத்தை வழங்கி, சிங்கள ஏகாதிபத்திய வாதிகளின் பிடியிலிருந்து தமிழர்கள் தம்மை மீட்டுக்கொள்வதற்கு தார்மீக ஆதரவையும் ஏனைய உதவிகளையும் நீங்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்."

—இவ்வாறு உலகத்தமிழ்ப் பண்பாட்டுக்கழகத்தின் இந்தியக்கிளை இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களிடம் சென்னை ராஜ்பவனில்வைத்துக் கையளித்துள்ள கடிதமொன்றில் கோரியுள்ளது.

உலகத்தமிழ்ப் பண்பாட்டுக்கழகத்தின் இந்தியக்கிளையின் தலைவர் திரு. தமிழ் மன்னன், செயலாளர் க. தன்மானம், பொருளாளர் திரு. சுந்தரம் ஆகியோர் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர். இக்கடிதத்தின் சாரம் வருமாறு:—

"தங்கள் சுதந்திரத்தை வென்றெடுத்து, தமக்கென ஓர் ஆட்சியை நிறுவுவதற்காக இலங்கையிலுள்ள எமது தமிழ்ச் சகோதரர்கள் வீரப்போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாட்டில் ஏராளமான தமிழர்கள் கொலை செய்யப்பட்டதும் அழிக்கப்பட்டதும் ஆழ்ந்த துன்பமான ஒரு நிகழ்ச்சியாகும். தமிழ் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். தமிழர் பொருட்கள், செல்வங்கள் சூறையாடப்பட்டன. இந்த மிலேச்சத்தனமான செயலுக்கு எதிராக நீங்களும் உங்கள் ஆட்சேபத்தை முன்பு தெரிவித்திருந்தீர்கள்.

இலங்கைத்தீவு இரண்டு தேசங்களையுடையது. அது சிங்களவர்களுக்கு மட்டுமேயுரியது என்று சிலரால் தவருக விளங்கப்படுகிறது. இலங்கையின் வடக்கு, கிழக்குப்பகுதிகளை தமிழ் மன்னர்கள் பண்டைக்காலத்தில் ஆட்சிபுரிந்துள்ளனர். பிரிட்டிஷார், இரண்டுநாடுகளையும் இணைத்தபின்னர், தமிழர்கள் படிப் படியாக அழிக்கப்படுகின்றனர்.

வெள்ளையரிடமிருந்து சுதந்திரம் கிடைத்தபின்னர், சிங்களவர்கள் தங்கள் மிருகத்தனமான பெரும்பான்மையைப் பாவித்து தமிழ்ச்சிறுபான்மையினரை அழிக்கத் தொடங்கினர். அவர்கள் சிங்களத்தை மட்டுமே உத்தியோகமொழியாக்கி, பௌத்தத்தை மட்டுமே அரசமதமாக்கியுள்ளனர்.

இந்துமதத்தைப் பெரும்பான்மையாகக் கொண்டொழுகும் தமிழர்கள் ஆட்சியாளப்படுகின்றனர். தமது இனத்தையும், மொழியையும், மதத்தையும் காப்பாற்றவே அவர்கள் தனிநாடு கோருகின்றனர். சுதந்திரப்போராட்டத்தில் தங்கள் உயிரையும் அர்ப்பணிக்கின்றனர்.

வெள்ளையராட்சிக்கு எதிராகப் போராடும் ஒடுக்கிய தேசிய மக்களின் போராட்டத்துக்கு நீங்கள் ஆதரவுக்கரம் நீட்டியுள்ளீர்கள்; பாலஸ்தீன விடுதலைக்கு உங்கள் ஆதரவை நல்கியுள்ளீர்கள். பங்களாதேஷ் போராட்டத்தின்போது முஜிபுர் ரகுமானுக்கும் உங்கள் ஆதரவை நல்கியுள்ளீர்கள். ஆனால், இலங்கைத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு இதுவரை நீங்கள் ஆதரவு வழங்காதது கண்டு துயரமடைகிறோம்.

மலேசியாவில் இந்துக் கோவில்கள் உடைக்கப்பட்டு பொருட்கள் சூறையாடப்பட்டன. இந்துக்களாக உள்ள தமிழர்கள் அங்கு பதட்டத்துடன் வாழ்கிறார்கள். இதுபற்றி அங்குள்ள இந்தியத் தூதுவர் அலட்சியமாக இருக்கிறார். எனவே மலேசியாவிலுள்ள இந்துக்கோவில்களையும் தமிழர்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மற்றும் தமிழினத்தின் ஒரே தலைவரான கலைஞர் கருணாநிதிக்கு எதிராக முந்திய அரசாங்கத்தின் காலத்தில் அரசியல் பழிவாங்கலுக்காக தொடரப்பட்ட வழக்குகள் அத்தனையையும் திரும்பப்பெறுமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

—இவ்வாறு அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# ஆங்கில ஏகாதிபத்தியத்தின் சிம்மசொப்பனமாக விளங்கியவன் வீரன் பண்டாரவன்னியன்

# அவனது அஞ்சாமையே நமக்குத் தேவை!

பாராண்ட பறங்கியரை பதைபதைக்க வைத்தவன் பண்டாரவன்னியன் நினைவை நெஞ்சில் நிறுத்துவோம்.

தமிழ் ஈழத் திருநாட்டின் வடபகுதியிலே வடக்கே யாழ்ப்பாண பரவைக்கடலையும், தெற்கே அருவி ஆற்றையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும், கிழக்கே திரிமலை மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டு விளங்குவது வன்னிமாநிலம்.

வன்னி மாநிலத்தை ஆண்டவர்கள் தமிழ் மன்னர்கள். அவர்களின் வரிசையிலே வன்னி மக்களின் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றவன் குலசேகர வைரமுத்து பண்டார வன்னியன். பிறந்த மண்ணில் பிறரை மிதிக்க விடாது வன்னி நாட்டை காத்த இறுதி மன்னன். அன்னியர்க்கடிபணியாது தன் இறுதி மூச்சு இருக்கும்வரை அடங்காது ஏகாதிபத்திய எதிர்ப்பின் சின்னமாக விளங்கியவன். "அஞ்சினர்கு சதாமரணம்அஞ்சாத நெஞ்சத்தாடவனுக்கோர் மரணம்" என்று கூறி நின்ற அஞ்சாத நெஞ்சன். வீரத்தின் சின்னம் அவன். துணிந்தவனுக்கு தூக்குமேடை பஞ்சு மெத்தைஎனவாழ்ந்து காட்டியவன். தமிழினம வாழவேண்டின் தன்னைத் தானே ஆளவேண்டுமென்பதை காட்டி நின்ற அரசியல் ஞானி, சுதந்திர தியாகி.

குளம்பல கொண்டு வளம் பல நிறைந்த வன்னிநாடு வீரம் நிறைந்த செறிந்த மன்னன் பண்டாரவன்னியன் ஆட்சியின் கீழ் செல்வம் கொழிக்கும்நாடாகத்திகழ்ந்தது. செந்நெல்லும் தேனும் பாலும் தேக்கும் யானைத் தந்தமும் நிறைந்தும் மலிந்தும் கிடந்தன. இதனைக் கண்ட அந்நியர்கள், கறுவா வாங்க வந்த கயவர்கள், நாடு பிடிக்கும் வேட்கை கொண்ட பிரித்தானியர்கள் வன்னியர் நாட்டின் மீது காதல் கொண்டனர். எப்படி யாவது வன்னிநாட்டை தமது கையின் கீழ் கொண்டு வர வேண்டுமென உறுதி பூண்டனர். "வெள்ளங்கியைக் கண்டால் விழ்ந்து விடுவான், பண்டாரவன்னியன்; வென்று விடுவோம் வீரர் நாம் என்றெண்ணி கப்பம் கேட்டனர். மாற்றானுக்கு மண்டியிட்டு பழக்கமில்லாத சுதந்திர தாகம் கொண்ட பண்டார வன்னியன் கப்பம் கொடுக்க மறுத்து மானம் கெட்ட மாற்றார் படையை துரத்த விடுதலைப் போர் தொடுத்தான்.

கற்பூரப் புல்வெளியில் நடந்த போரிலே ஆங்கிலேயரை விரட்டியடித்து புறமுதுகு காட்டச் செய்தான். 1803ம் ஆண்டில் முல்லைத்தீவு கோட்டையைத் தாக்கி —கப்ரன் றிபேக் தலைமையிலுள்ள படைகளை பின்வாங்கச் செய்தான். அச்சம் கொண்ட ஆங்கிலேயர் யாழ்ப்பாணம், மன்னார், திரிமலை ஆகிய இடங்களிலிருந்து மும்முனைத்தாக்குதலைச் செய்தனர். தன்நாட்டைக் காப்பதையே தன் இலட்சியமாகக் கொண்ட பண்டாரவன்னியன் எதற்கும் அஞ்சவில்லை.

நேருக்கு நேர்நின்று பண்டாரவன்னியனைவெல்ல முடியாது என்று கண்ட பிரித்தாழும் தந்திரத்தையுடைய பிரித்தானியர் கரிக்கட்டு மூலையரசன் காக்கை வன்னியனை நாடினர். நாவல்லவயர்களல்லவா? நாடு பிடிக்கும் நோக்கத்தோடுகாக்கை வன்னியனைத் தம்வசமாக்கினர். பதவிகள் பட்டங்கள் தருகிறோமென ஆசைகாட்டி பண்டார வன்னியனையும் அவர்களின் படைகளையும் காட்டித்தரும்படி கேட்டனர். எச்சிலிலை நக்கித்திரியும் நாய், எட்டப்பர் கூட்டத்து வழித்தோன்றல், சுதந்திர உணர்ச்சியற்றவன், அற்ப சலுகைகளுக்காக தம்மினத்தைக்காட்டிக் கொடுக்கும் அயோக்கியன், காட்டிக் கொடுத்தான்.

நிராயுதபாணியாக நின்ற பண்டாரவன்னியனையும் அவனது படைகளையும் கண்ட பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் இது தான் தக்க சமயமெனக் கண்டு துப்பாக்கி முனை கொண்டு தாக்கினர். வீரத்தாய் வயிற்றிலே உதித்தவனான பண்டாரவன்னியன் நிராயுதபாணியாக நின்றும் கூட புறமுதுகிட்டுஒடாது, அவர்களை எதிர்த்து நின்று போராடினான். போர்த் தர்மத்தைப் புறக்கணித்து தொடர்ச்சியாக செய்த துப்பாக்கிப் பிரயோகத்தால் வீர மரணமடைந்தான் பண்டாரவன்னியன்.

> 1619 ம் ஆண்டு யாழ்ப்பாண அரசு விழ்ச்சியுற்ற பின்னரும், 1803 ம் ஆண்டு வரை தமிழரின் இறைமையைக் காத்து, 1803ம் ஆண்டு அக்டோபர் 31ம் திகதி வரை ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு தமிழனின் மானங்காத்த மாமறவன்— பண்டாரவன்னியனின் நினைவு நாளையொட்டி இக்கட்டுரை இங்கு இடம் பெறுகிறது— ஆ-ர்

அன்னை பூமியை அந்நியர் கையிலிருந்து காப்பாற்ற அயராது பாடுபட்ட பண்டாரவன்னியனை 1803 ம் ஆண்டு அக்ரோபர் 31 ம் நாள் கற்சிலைமடுவிலே தோற்கடித்தனர். ஆங்கிலேயர் தமது புகழை நிலைநாட்ட நிறுவிய கற்சிலை, பண்டாரவன்னியன் வீரத்தை இன்றும் பறைசாற்றிக்கொண்டே இருக்கிறது. இது ஒன்றே அவனின் வீரத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

ஏகாதிபத்திய வாதிகளுக் கஞ்சாது தாய் நாட்டின சுதந்திரத்தைக் காத்து தன் இறுதி மூச்சிருக்கும் வரை வன்னி நாட்டின் ஒரடிமண்ணைக் கூட மிதிக்க விடாது சுதந்திர பூமியாக மிளிரச் செய்தான். அத்தகைய வீரம் செறிந்த மன்னனின் நினைவு தினம் 31-10-1978 ஆகும். இந் நாள் தமிழ் மக்களின் வீர வரலாற்றை ஞாபகப்படுத்தும் நன்நாள். இந்நாளிலே பாராண்ட பறங்கியரை எதிர்த்துப் போராடிய பண்டாரவன்னியன் நினைவை நெஞ்சில் நிறுத்தி அவன் விட்டுச் சென்ற விடுதலைப் பணியை ஏற்று திட்டமிட்டு எமது தமிழ் மண்ணை கைப்பற்றும் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்து காட்டிக் கொடுக்கும் இனத்தை அழித்து, மீண்டும் சுதந்திர பூமியாக மாற்றி சுதந்திர இனமாக வாழ்வோமாக.

வாழ்க பண்டாரவன்னியன்!

வளர்க அவன் புகழ்!!

**க. தர்மலிங்கம்**
(யாழ் வளாகம்)

## தொண்டமான்—

—7-ம் பக்கத் தொடர்

சாக இருக்கவேண்டும். அல்லது திட்டமிட்ட விஷமத்தனமான பொய்ப் பிரசாரமாக இருக்க வேண்டும்.

திருகோணமலை மண், புனிதமானது. தெய்வீகம் நிறைந்த இடம். இந்த மண்ணில் செய்யும் அநியாயங்களுக்கு என்றே ஒருநாள் பதிலளித்தாக வேண்டும். இதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நான் புத்த பெருமானைப் பயபக்தியுடன் வணங்குகிறவன். கபிலவஸ்து புனிதசின்னங்கள் திருகோணமலைக்கு வந்த பொழுது, அவற்றை நேரில் சென்று வரவேற்றேன்.

ஆனல், பண்டைச் சரித்திரத்தையே தலைகீழாக மாற்றி அமைக்கும் புரட்டுக்களை அனுமதிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழின சங்காரத்துக்கு மேற்கு நாடுகள் உதவப்போகிறதா?

இலங்கைத் தீவில் இன ஒழிப்பு பல்வேறு ரூபங்களில் கன கச்சிதமாக நடைபெறுகிறதா என்ற கேள்வி சர்வதேச வட்டாரங்களில் எழுந்துள்ளது. மலையகத் தோட்டத் தமிழ்த் தொழிலாளரது குடியுரிமை, வாக்குரிமை பிடுங்கப்பட்டது முதல் எவ்விதம் அரசியல் நடைப்பிணங்களாக்கப்பட்ட அம் மக்களின் ஜனத்தொகைக் கணிப்பையும் கூட பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்து வந்ததை ஒடுக்குவதற்குச் சாதகமாக்கி சிங்களவர் பிரதிநிதித்துவத்தை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் யுக்தி தென்னுபிரிக்காவில் தானும் கடைப் பிடிக்கப்பட்டதில்லையென்று சம்பந்தப்பட்ட வட்டாரங்களால் வர்ணிக்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் குடியுரிமை பறிக்கப்பட்ட தமிழ் மக்கள் வாழ்வின் சகல துறைகளிலும் ஒதுக்கி வந்த சிங்கள இனவெறி ஆட்சிகள் காலப்போக்கில் பூர்வ குடித் தமிழ் மக்களையும் இனவொழிப்புகளுக்கு உள்ளாக்கத் திட்டமிட்டு செயலாற்றின. மதனஞுபாக்க வெள்ளையர் ஆட்சி அரசுக் கொள்கையாக அறிவித்து வெளிப்படையாகவே மேற்கொண்டு வரும் இனவாத நடவடிக்கைகளை, ஆரிய பௌத்த சிங்கள பாசிச ஆட்சிகள் திரைமறைவில் மறைமுகமாகவும், நுட்பமாகவும் கையாண்டு வந்த காரணத்தால் உலகின் கண்களுக்கு அவை வெற்றிகரமாக இருட்டடிப்புச் செய்யப்பட்டன.

### மொழி கல்வி பாரபட்சம்

தனிச் சிங்களம் உத்தியோக மொழியாக்கப்பட்டது தமிழ் மக்களை அரசாங்க, கூட்டுத்தாபன, உள்ளூராட்சி உத்தியோகங்களில் இருந்து ஒதுக்குவதற்காகவே! இந் நடவடிக்கையை நீதிமன்றங்கள் வரை நீடிப்பதற்காகவே நீதிமன்ற மொழியாகவும் சிங்கள மொழி கொண்டு வரப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் அடுத்தபடியாக தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வியை மறைமுகமாக மறுக்கும் நோக்குடன் பல்கலைக் கழகங்களில் அவர்களுக்கு கதவடைப்புச் செய்யக் கை கொடுத்து உதவியது பல்கலைக் கழகப் புகுமுகப் பரிட்சையில் கைக்கொள்ளப்பட்ட மொழிவாரித் தரப்படுத்தல். சிங்கள ஆட்சியாளரின் இனவாதப் போக்கை மேற்படி மொழிவாரித் தரப்படுத்தல் ஓரளவு அம்பலப்படுத்தியதும், அதனைப் போர்த்து மூடுவதற்காக மாவட்டக்கோட்டா முறையாக அது மாற்றப்படுமென்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

புதிதாகப் பதவிக்கு வந்த அரசு உலகின் கண்டனத்தில் இருந்து தப்புவதற்காக தகுதி அடிப்படையிலேயே மாணவர்கள் பல்கலைக் கழகப் பிரவேசம் இடம்பெறுமென்று பகிரங்கப்படுத்தியிருந்த பொழுதிலும் அது முற்றாகக் கைவிடப்பட்டு விட்டதாகச் சொல்வதற்கு எவ்வித முகாந்திரமும் இடையாது.

### குடியேற்றம்

தற்போது குடியேற்றத் திட்டங்கள் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் மரபு வழித் தாயகத்தைத் பறிப்பதன் மூலம் தமிழர்களின் தாயகமான தமிழ் ஈழத்திலேயே தமிழர்களைச் சிறுபான்மையாக்கி அவர்களுக்குரிய தேசிய இன அடையாளத்துக்கும் கேடு சூழப்படுகிறது. இது இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டதல்ல:

இலங்கைத் தீவுக்கு சுதந்திரம்— அரசியல் அதிகாரம் கிடைத்த நாளில் இருந்தே திருட்டுத்தனமாக மேற்கொள்ளப்பட்ட கைங்கரியமாக இருந்து வந்த மேற்படி இனவொழிப்பு நடவடிக்கையை தற்போதைய ஜனாதிபதி தற்போது பகிரங்கமாகவே செய்யப்போவதாக அறிவித்திருப்பது மேற்கு நாடுகளில் சிறிது தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அறியப்படுகிறது. கூட்டுச்சேரா நாடுகளும், அவற்றைப் பெரும்பான்மையாகப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஐ. நா. பொதுச் சபையும் இனவாதத்தையும் இனவொதுக்கல், இனவொழிப்புப் போன்ற பாசிசப் போக்கையும் எதிர்த்துத் தீவிரமாகக் குரல் கொடுத்து வரும் கால கட்டத்தில் எதிர்நீச்சல் அடிக்க முடியாத நிர்ப்பந்த நிலை மேற்கு வல்லரசு நாடுகளுக்கு.

### மேற்கு நாடுகள் பீதி

எந்தக் காரணக் காரியங்களுக்காக ஒப்புக்காவது தென்னுபிரிக்க, ரொடீசிய இனவெறி நாடுகளை எதிர்ப்பதாக அவை போக்குக் காட்டுகின்றனவோ அதற்கு நேர்மாறாக இலங்கைத் தீவின் விடயத்தில் அங்கு இடம் பெறும் இனவொழிப்பு எத்தனங்களுக்குப் பயன்படும் வகையில் நன்கொடைகளையும் கடன்களையும் வழங்கி இனவொழிப்புக்கு உடன்போக்காகத் தாமும் அந் நடவடிக்கைகளில் பங்கு கொள்வது உலக சமுதாயத்தில் பகிரங்கப் படுத்தப்பட்டு விடுமோ மென்ற பீதி அவற்றிற்கு இருப்பது நியாயமானதே!

மகாவலி திசை திருப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நீர்ப்பாசன விவசாயத் திட்டங்களுக்கு மேற்கு வல்லரசு முகாமைச்சார்ந்த நாடுகளே ஏராளமாகப் பொருளுதவி புரிந்து வருவது அப்பட்டமான உண்மை! தமிழ் மக்களின் மரபுவழித் தாயகத்திலும் அதையடுத்துள்ள பிரதேசங்களிலுமே இத்திட்டங்கள் அடங்குவதால் இத் திட்டங்கள் மூலம் அங்கு இடம்பெறவுள்ள தனிச் சிங்களக் குடியேற்றங்களுக்கு அவை பொறுப்பேற்கவேண்டிய நிலை.

"ஆரிய, பௌத்த சிங்கள பாசிச இனவாத முதலாளித்துவ ஆட்சியின் தமிழ் ஈழ நில ஆக்கிரமிப்புக்கு மூலாதாரமே மேற்கு நாடுகள் உதவி வரக்கூடிய பாரிய நன்கொடைகளும், கடன்களும் தான். இந்த வகையில் இலங்கைத் தீவில் படிப்படியாக மேற்கொள்ளப்படும் தமிழின ஒழிப்பு நடவடிக்கைகளில் மேற்கு நாடுகளும் பங்கு கொண்டு வருவதாக கூட்டுச்சேரா நாடுகள் மட்டுமன்றி சோசலிச முகாம் நாடுகளும் குரல் கொடுக்கத் தலைப்படலாம் என்ற பயம் மேற்கு நாடுகளுக்கு.

### விடுதலை இயக்கங்களின் பணி

அண்மைக்காலமாக இங்கிலாந்திலும், மேற்கு நாடுகளிலும் தமிழ் ஈழ விடுதலைக்காகத் தீவிரமாக இயங்கி வரக்கூடிய தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் சோசலிச முகாம் நாடுகளும், கூட்டுச் சேரா நாடுகளும் உணரும் வகையில் "தமிழ் ஈழ மண்ணின் ஆக்கிரமிப்புக்குப் பின்னால் எந்தச் சக்தி உள்ளது என்பதைப் பகிரங்கப்படுத்தும் அறிக்கைகளையும், இலக்கியங்களையும் வெளியிட்டு விட்டால்" தம் நிலை என்னுவது என்று மேற்கு நாடுகள் கலங்குகின்றனவாம்.

ஆகவே, இலங்கைத்தீவில் மேற்கொள்ளப்படும் பாரிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு அவை உதவிகளை மறுக்கக் கூடும். அல்லது தமிழ் ஈழத்தில் தமிழர் மரபுவழித்தாயகத்தில் இனக்கொலைக்கு ஒப்பான சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படலாகாது என்று நிபந்தனை விதிக்கவும் முன்வரும் சாத்தியம் வலுத்து வருவதாக சம்பந்தப்பட்ட சர்வதேச வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

தமிழ் ஈழத்தில் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட விருப்பதற்கான நோக்கத்தை ஜனாதிபதி ஜே. ஆர். பார் அறியப் பறைசாற்றியிருப்பது இலங்கையில் சிந்திப்பவர்களுக்கு புத்தம் புதிய உத்திகளை ஏற்படுத்த உதவியிருக்க வேண்டும். தமிழ் ஈழத்தில் சிங்களக் குடியேற்றம் சர்வதேச சட்ட மீறலே! அது தமிழ் இன சங்காரத்துக்கு ஏதுவானது என்ற குரல் இனி உலகடங்கிலும் ஒலிக்குமென்று எதிர்பார்ப்போம். -திரவியம்

## "தொண்டமான் இப்போது கூட்டணியில் இல்லை! தமிழருக்காகப் பேச 'தேவா'வுக்கு உரிமை கிடையாது."
## சன்சோனி ஆணைக்குழுமுன் சம்பந்தன் சாட்சியம்!

மிக விரைவில் தமிழ் ஈழத்தை நாம் மீட்டெடுப்போம் என்பதில் தமக்கு அசையாத நம்பிக்கையிருப்பதாக சன்சோனி ஆணைக்குழு முன் சாட்சியமளித்த திருகோணமலை பா.உ. திரு. இரா. சம்பந்தன் அரசு நரப்புச்சட்டத்தரணியின் குறுக்கு விசாரணையின் போது உறுதியாகத் தெரிவித்தார்.

திரு. சம்பந்தன் மூன்று நாட்கள் குறுக்கு விசாரணை செய்தபோதும், அவர் சளைக்காமல் பதிலளித்தார். திரு. சம்பந்தன் மேலும் கூறியதாவது:-

"முன்னர் இருந்த அரசு தமிழ் மக்களுக்கு கொடுத்திருந்த உரிமைகளைவிட, இப்போது புதிய அரசியலமைப்பின்படி அதிக உரிமைகள் வழங்கப்பட்டுள்ளதென்பது தவறான கருத்தாகும். நான் இதை ஏற்கவில்லை. சட்டத்தில் மட்டும் இருந்து விட்டால் போதுமா? நடைமுறை விடயங்களையே நாம் அவதானிக்க வேண்டும். இன்று கூட எனக்கு வரும் அரசாங்கக் கடிதங்கள் யாவும் சிங்கள மொழியிலேயே அனுப்பப்படுகின்றன. அநுராதபுரம் போன்ற பகுதிகளில் உள்ள தபால் நிலையங்களில் தமிழில் படிவங்கள் இல்லை. அங்கு சென்று தமிழ்... வம் வேண்டுமென்று கேட்டும் ஒருவர் பாதுகாப்புடன் வீடுபோய்ச் சேர்வாரா என்பது சந்தேகமே. சிங்களப் பகுதிகளில் இந்த நிலை நிலவும் போது, தமிழர் மொழி உரிமையை முற்றாகப்பெற்று விட்டதாக எவ்வாறு கூற முடியும்!

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை— புதிய அரசியல் சட்டத்தினால் அவர்களுக்கு எவ்வித பயனும் விளையப்போவதில்லை. அதனால்தான் அதைஎதிர்த்தோம். ஆனால் எமது இலட்சியத்தை எடுத்து விளக்கும் ஒரு மேடையாகப் பாராளுமன்றத்தைப் பயன்படுத்துவதற்காக கூட்டணியின் தீர்மானப்படி சத்தியப்பிரமாணம் எடுத்தோம்.

திரு. தொண்டமான் அரசில் அங்கம் வகிப்பதால் அவரை முழு இந்திய வம்சாவழியினருக்கும் தலைவராகக் கணிக்க முடியாது. தற்போது அவர் நுவரெலியா— மஸ்கெலியா தொகுதியின் மூன்றாவது உறுப்பினராக உள்ளார். மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு வேறு பல தலைவர்களும் உள்ளனர். திரு. தொண்டமான் மட்டும் ஒரே தலைவர் எனக்கணித்து விடமுடியாது. திரு. தொண்டமான் முன்னர் கூட்டணியின் ... தொகுவராக இருந்தவர். அவர் இப்போது கூட்டணியில் ஓர் உறுப்பினரல்லர்.

"மிகக் குறைந்த பெரும்பான்மை வாக்குகள் பெற்றுத்தான் திரு. தேவநாயகம் நடந்த தேர்தலில் வெற்றியீட்டினார். அவருக்கு இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் சார்பில் பேசுவதற்கு அருகதை கிடையாது. கிழக்கு மாகாணத்திலுள்ள இந்த தமிழ்த் தேர்தல் தொகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி நான்கில் வெற்றியீட்டியது; ஒன்றில் தான் வெற்றி வாய்ப்பை இழந்தது."

### கோணேசர் கோவில் வரலாறு

திருகோணமலை, கோணேசர் ஆலயத்தின் சரித்திரம் முதன்மையானது கூறுகின்றேன். என்றைக்கும் நினைவில் வைத்து இருங்கள்.

கோணேசர் ஆலயம் கிறிஸ்துவுக்கு முன் 1300 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. கொரிங்டன் என்ற மேல்நாட்டு ஆராய்ச்சியாளரின் முடிவின்படி கிறிஸ்துவிற்கு முன் 2900 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது என்று கூறப்படுகின்றது. புத்த பெருமானுர் பிறப்பதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் கோணேசராலயம் கட்டப்பட்டது.

ஏழாம் நூற்றுண்டில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் பாடல் பெற்றதலம் இது.

பதினைந்காம் நூற்றுண்டில் அருணகிரிநாத சுவாமிகளால் இத்தலம் பாடல் பெற்றது.

கிறிஸ்துவிற்குப் பின் 1624இல் போர்த்துக்கீசர் இந்த ஆலயத்தை உடைத்தனர் அதன் பின்னர் இந்துக்கள் இவ்வாலயத்திற்குச் சென்று வணங்குவதை டச்சுக்காரர்களும், போர்த்துக்கேசர்களும் அனுமதிக்கவில்லை. பிரிட்டிஷார் ஆட்சிக்கு வந்தவுடன்தான் ஆலயத்திற்குச் சென்று வழிபட இந்துசமய மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஆயிரம் தூண்களுடன் மாபெரும் கோயிலாகக் கோணேசராலயம் பண்டைக் காலத்தில் விளங்கியது.

அப்படிப்பட்ட இந்த ஆலயத்தில் புத்த பெருமானின் சிலை இருந்ததாகவும், தோண்டி எடுக்கப்பட்டதாகவும் கூறுவது, ஒன்றில் பைத்தியக்காரனின் பேச்

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னிசை விருந்து

தந்தை செல்வாவின் சிந்தனையூட்டும் இலவச இன்னிசை விருந்து ஒன்று சித்தன் கேணியிலுள்ள த.வி.கூ. அலுவலகத்தில் 29-10-78 ஞாயிறு மாலை 5 மணிக்கு இடம் பெறுகிறது. இந்த இன்னிசை நிகழ்ச்சியை க. மகேஸ்வரன் அளிக்கிறார். இந் நிகழ்ச்சிக்கு வட்டுக் கோட்டை பா. உ. திரு. தா. திருநாவுக்கரசு தலைமை தாங்குகிறார்.

## தேவநாயகத்தின் தீர்க்கதரிசனங்கள்

''1978ம் ஆண்டு யூலை 31ம் திகதியுடன் தமிழர் பிரச்சினை தீர்ந்து விடும்;''

— அமைச்சர் தேவநாயகம்
(வீரகேசரி 6-6-78)

''அடுத்து இருவருடங்களில் தமிழர் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படும்!''

— அமைச்சர் தேவநாயகம்.
(வீரகேசரி 22-10-78)

## விடுதலை போராட்ட திரைப்படம்

30-10-78 திங்கள் மாலை 6 மணிக்கு துன்னாலை வடக்கு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில்முன்றலில் ''பிராக்'' நாட்டு விடுதலைப் போராட்டம் பற்றிய 3 மணிநேர திரைப்படம் உடுப்பிட்டி தொகுதி த. இ. பேரவை ஆதரவில் காண்பிக்கப்படும்.

## வெளியீட்டுவிழா

திருமலை சுந்தாவின் 'வேள்வி' எனும் சிறுகதைத் தொகுதி 22-10-78ல் திருகோணமலையில் வெளியிடப் பட்டது. இதன் முதல் பிரதியை இரா. சம்பந்தன் பா. உ. வாங்கினார்.

## அம்பிட்டியாவில் கருத்தரங்கு

''புதிய அரசியலமைப்பும் தமிழரும்'' என்ற தலைப்பில் அம்பிட்டியா தேசிய குருத் துவக் கல்லூரியிலுள்ள சக்கறு கலையரங்கில் 29-10-78 ஞாயிறு காலை 9 மணிக்கு கருத்தரங்கு ஒன்றினை ஞானப்பிரகாசர் தமிழ்க்கழகம் நடத்துகிறது. இக்கருத்தரங்கின் தொடக்கவுரையை உயர்திரு. சிவராசா எம்.ஏ நிகழ்த்துவார். இ. தொ. கா. சார்பில் திரு. ஜேசுதாசனும், த. வி. கூ. சார்பில் திரு. ஈழவேந்தனும் இதில் கலந்து கொள்ளுகிறார்கள்—




துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப்பவுடர் வாங்கி உபயோகியுங்கள், பலஅளவுகளில் விற்பனையாகின்றது.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்


**கிங்ஸ்லி** (கொழும்பு)

சிவாஜி கணேசன், ஜெயலலிதா
சந்திரபாபு நடித்த-

**நீதி**

[புதிய பிரதி கலர்]

**கெப்பிட்டல்** 4-வது வாரம்

மரிக்கார் ராமதாஸ், ஹெலன் குமாரி,
சிவராம், ராஜகோபால் நடித்த-

**ஏமாளிகள்**

**விஜயா** (மட்டுநகர்)

**அநுராகம்**

**லிடோ** (யாழ்நகர்)

**அனைத்தை ஆனந்தன்**

**செல்லமகால்**

எம், என்: சிவராம், எஸ். என். தனரட்ணம்,
விஸ்வநாதராஜா, சந்திரகலா,
அனோஜா, மாஸ்டர் ஹைஜி, செல்வம்
பொஸ்கோ நடித்த -

**அநுராகம்**

**றொக்ஸி** [வெள்ளவத்தை]

**திருடாதே**

(புத்தம் புதிய கொப்பி)

**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை] 5-வது வாரம்

எம். ஜி. ஆர். — மாதுருதேவி
அஞ்சலிதேவி, பண்டரிபாய், நம்பியார்
- நடித்த -

**மர்மயோகி**

(புதிய பிரதி)


இப்பத்திரிகை, சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org